பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 25 திங்கட்கிழமை (09-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 210

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

## பூரண ஹர்த்தால் நடந்த 48 மணி நேரத்திற்குள்
# தாயுடன் தங்கியிருந்த பெண் மீது சீருடையினர் பாலியல்வல்லுறவு!

## இரவுவேளை மீசாலையில் சம்பவம்

(புலோலி, மந்திகைநிருபர்கள்)

மீசாலைப்பகுதியில் திருமணமாகாத பெண்ஒருவர் சீருடை அணிந்தவர்களினால் அவரது82வயது நிரம்பியதாயாரின் முன்னிலையில் தாக்கப்பட்டு பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட சம்பவம்ஒன்று நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

தமிழ்பெண்கள் மீதுதொடரும் பாலியல்வல்லுறவுச் சம்பவங்களைக் கண்டித்து வடக்குகிழக்கில் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு 48மணிநேரத்துக்குள் இக்கொடூர சம்பவம் நிகழ்ந்துள்ளது

இச்சம்பவத்தின்போது காயமடைந்த தாயாரும் பாலியல்வல்லுறவிற்குடபடுத்தப்பட்ட மகளும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அல்லாரை தெற்கு மீசாலைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் இந்த பாலியல் வல்லுறவுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தம்பிப்பிள்ளை தனலட்சுமி வயது 42 என்ற திருமணமாகாத பெண்ணே பாலியல் வல்லுறவுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் நேற்று மாலை அனுமதிக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

## ரணில்-ரவூப்ஹக்கீம் நேற்று முக்கிய சந்திப்பு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தை சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்றுள்ளது.

இப்பேச்சுக்களின் போது

[8 ஆம் பக்கம்பார்க்க]

## பிரச்சினையை தீர்க்கும் ஆற்றல் ஜனாதிபதிக்கு உண்டு
### ஹனீபா எம்பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை திறந்தமனத்துடன் அணுகி தீர்வு காணக்கூடிய ஒரேயொரு தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே ஆவார்;

இவ்வாறு அம்பாறையில் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் உரையாற்றிய தேசிய ஐக்கிய முன்னணியின் பாராளு

[8-ம் பக்கம் பார்க்க]

## மட்டு- வாகரையில் கிளைமோர் வெடித்து 4பொது மக்கள் காயம்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மட்டக்களப்பு வாகரைப் பகுதியில இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் சிக்கி நான்கு பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்;

நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் வாகரை கதிரவெளி கட்டுமுறிப்புக்குள வீதியில் பொதுமக்கள் பிரயாணம் செய்த உழவு இயந்திரத்தின் மீதே மேற்படி கிளைமோர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

படையினர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஊடுருவிஇத்தாக்குதலை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ஐ.தே.கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்க முன்வர வேண்டும்
### ஆளுங்கட்சி எம்பிக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் பொருளாதார நிலையில் நாடு இன்று மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டதால் அரசாங்கம் ஐக்கிய தேசியக்கட்சியுடன்சேர்ந்து ஆட்சியமைக்க வேண்டும்.

இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

ஜனாதிபதிக்கும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கும் அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற பிடிவாதத்தைக் கைவிட்டு மக்களைப்பற்றி சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

எனவே அரசாங்கம் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் சுமூகமான தீர்வு ஒன்றைக்கான எதிர்க் கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவதே வழியாகும் என்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்; (ந-5)

## திவ்வியனின் விடுதலைக்காக வவு.பல்கலை மாணவர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவன் கி திவ்வியன் பாதுகாப்புபடையினரால் கைதுசெய்யப்பட்டதை கண்டித்து யாழ் பல்கலைக்கழக வவுனியாவளாக மாணவர்கள் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ளபல்கலைக்கழக நிர்வாக அலுவலகத்திற்குமுன்னால் நடைபெறவுள்ளது. இதன்மூலம் இன்று பல்கலைக்கழக நிர்வாகத்தை முடக்கப்போவதாக மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

தமது கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்காது போனால் பகிஷ்கரிப்புப்போராட்டம் தொடர்வதுடன் அதுமேலும் விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ

## யாழ். பல்கலைக்கழக நுழை வாயில்கள் இன்று திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுழைவாயில்கள் ஆறுநாட்களுக்குப்பின் மீண்டும் இன்று திறக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவனும், மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளருமான கி. திவ்வியனை கடந்த 2ம் திகதி இரவுபடையினர் கைது செய்ததை அடுத்து மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டத்தை அடுத்து பல்கலைக்கழகநுழைவாயில்கள் பூட்டப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாணவர் ஒன்றிய பொதுக்கூட்டம் நடைபெறவிருப்பதை அடுத்தே பல்கலைக்கழக நுழைவாயில்கள் திறக்கப்பட்வுள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்களின அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களின் பொதுக் கூட்டம் இன்று காலை 9.30மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் மன்ற ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (வ)

## யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு மேலும் 219 மாணவர்கள் அனுமதி

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு 2001 - 2002 கல்வியாண்டுக்கு மேலும் 219 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது

அத்துடன் வடக்குக் கிழக்கிலிருந்து மேலும் 290 மாணவர்களை யாழ் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி பல்கலைக்கழக மாணவர் அனுமதி தொடர்பாக வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் பேச்சு நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

[இ]

## பிரிட்டனிலும் நேற்று பொங்கு தமிழ் எழுச்சி

(லண்டன்)

தமிழ்மக்களின்தாயகம், தேசியம், சுயநிர்ணயஉரிமைஆகியவற்றை வலியுறுத்தி பிரிட்டனில் நேற்று பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பிரிட்டனின் பலபாகங்களிலும் வாழும தமிழ் மக்கள் லண்டன்மாநகரிலுள்ளவிமிலிவளரினா மண்டபத்தில் திரண்டுஎழுச்சியுடன்பொங்கு தமிழ் நிகழ்வில் ஈடுபட்டனர்.

யாழ்பலகலைக்கழக சமூகத்தினால் முன்னெடுக்கப் பட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொடரும் அகதி முகாம் வாழ்வு

# எம்மை பெரிதும் சீர்குலைத்துள்ளது

## அகதி முகாம் வாசிகள் தெரிவிப்பு

(துன்னாலை)

நாம் இடம்பெயர்ந்து ஒருவருடம் ஆகிறது சீரான தொழில் எதுவும் இல்லை நிவாரணத்தை நம்பியே எமது வாழ்வை நகர்த்த வேண்டியுள்ளது

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையை அடுத்து இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதி அகதி முகாம்களில் வாழ்வோர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; முகாம்களின் அமைப்பு குடும்ப எண்ணிக்கை கூடிய வர்களுக்கு போதுமானதல்ல. பாடசாலைப் பிள்ளைகள் கல்விகற்க முகாம்களில் போதிய வசதிகள் இல்லை. ஜீ.ரி. சற், யு என் எச். சி. ஆர் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வைத்திய வசதி, மற்றும் கட்டடவசதி உட்பட இதர வசதிகள் செய்து தரப்பட்டது.

என்றும் நீண்ட காலம் தொடரும் அகதி முகாம் வாழ்வு எமது வாழ்வை பெரிதும் சீர்குலைத்துள்ளது.

நாம் இடம்பெயர்ந்து ஒரு வருடமாகியும் கூட சீராக ஒரு வாழ்வை அமைக்க முடியாமல் உள்ளது.

கடந்த ஒரு வருட காலமாக ஒருவாறு தற்காலிக கொட்டகைகளில் காலத்தைக் கழித்தோம் ஆனால் எதிர் வரும் 6 மாதமும் மாரி காலமாக அமையப் போவதால் முகாம் குடிசைகள் மீளமைப்புச் செய்யவேண்டியுள்ளது (க-41)

# அனலைதீவு படகுச் சேவை சீர்செய்யப்படவேண்டும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

[ஊர்காவற்றுறை]

அனலைதீவு-காரை படகுச் சேவையினைச் சீர்செய்ய வேண்டும் என பொதுஅமைப்புக்கள் வேண்டுகோள விடுத்துள்ளன.

எதுவித அடிப்படை வசதிகளுமற்ற இரண்டு தனியார் படகுகள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றதாகத் தெரியவருகின்றது

இதனால் படகுச் சேவை சீரில்லாமல் இடம்பெறுவதுடன் குடிநீர், பாதுகாப்புச் சாதன வசதிகளும் இல்லை என மேலும் தெரியவருகிறது

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக கடந்த 10 வருடங்களுக்கு முன் இடம்பெற்றது போல் வீதி அபிவிருத்தி அதிகார சபை படகுச் சேவை ஒன்றை நடத்த வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடத்தில் சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். [க-75]

# இவ் வருடத்தில் ஏழுபேர் மட்டுமே மலேரியாவால் பீடிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர்களில் இவ் வருடம் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு ஏழுபேர் மட்டுமே சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மூன்று பேரும் வேலணை, அல்லைப்பிட்டி ஆகிய இரு பகுதியிலும் தலா இருவர் வீதமும் மொத்தமாக 7 பேர் சிகிச்சை பெற்றார்கள் என மேலும் தெரிய வருகின்றது.

மலேரியா நோயை கட்டுப்படுத்தும் மலத்தியோன் இப்பகுதிகளில் விசிறப்பட்டு வருவதே மலேரியா நோயின் தாக்கம் இப்பகுதியில் குறைவாக இருப்பதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-75)

# மதுபானசாலைகள் அமைப்பதற்குத் தடை

(ஊர்காவற்றுறை)

சண்டிலிப்பாய் சாவல்கட்டு கிராமத்தில் மதுபானசாலை, மதுபானக்கிளை அமைப்பதற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தடைவிதித்துள்ளது.

சாவல்கட்டு கிராம மக்களின் நலனினை கருத்திற்கொண்டு இவ்வாறு மதுபானசாலை, மதுபானகிளை ஆகியன திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என தெரியவருகிறது.

அண்மையில் சாவல்கட்டு கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் சங்கத்தலைவர் கே. சுதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இதுகுறித்து முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது (க-75)

# விதவைப் பெண்களுக்கு வீடு அமைக்கும் திட்டம்

## ஜீ. ரி. சற் நிறுவனம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஜீ. ரி. சற் நிறுவனம் விதவைப் பெண்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஒன்றை செயற்படுத்த முன்வந்துள்ளது.

125 விதவைப் பெண்களுக்கு 2 கோடி ரூபா செலவில் இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கென சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து விதவைப் பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வீடு ஒன்றுக்கு தலா ஒரு லட்சத்து ஏழாயிரம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருட்களை ஜீ. ரி. சற் நிறுவனம் வழங்கும் இதே வேளை கட்டுமான செலவுகளுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு பதினெட்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை வழங்கவுள்ளது. (இ-5

# மணற் காட்டில் மீண்டும் மண் அகழ்வு ஆரம்பம்

## பொது மக்கள் பெருங்கவலை

[செம்பியன்பற்று]

மணற்காட்டில்மண அகழ்வு நடவடிக்கை மீண்டும் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்

இந் நடவடிக்கை மேலும் தொடருமாயின் கடல் நீர் உட்புகும் அபாயம் வெகு விரைவில் உருவாகும் என அப் பகுதிமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது (க-42)

### பல துறைகளிலும்...

இயமை பெண்களின உழைப்பு அந்தஸ்தையும், உற்பத்தி அந்தஸ்தையும் உயர்த்துவதற்குத் துணை செய்தது.

இவற்றுடன் தொடர்புடையதாக பத்திரிகைத் துறையில் யாழ்ப்பாணத்துப் பெண்கள் ஈடுபடுவதற்குரிய வளமான பின்புலம்தோன்றியது.

### பெண் பத்திரிகையாளர்

'யாழ். நங்கை' என்றபுனை பெயரை வரித்துக்கொண்ட திருமதி அன்னலட்சுமி ராஜதுரை மற்றும் போகா பாலச்சந்திரன் முதலியோர் இப்பிரதேசத்தால் வளர்க்கப்பட்ட ஆற்றல் மிக்க பெண் பத்திரிகையாளர்களாவர்.

பெண்களின் அந்தஸ்தை உயர்த்துவதிலும், பெண்கள் தொடர்பான நீதியான புலக்காட்சியைக் கட்டுவதிலும், நவீன பெண்ணியவாதிகள் குறிப்பிடுகின்ற பெண்களின் படிமத்தை (IMAGEOF WOMEN சிதைவுபடாமல் காட்டுவதிலும் மேற்குறிப்பிட்ட இரண்டு பத்திரிகையாளரும் சிறப்பார்ந்த பங்களிப்பைச் செய்து வருதல் குறிப்பிடத்தக்கது

### இதழியல் வரலாறு

தமிழ் இதழியல் வரலாற்றில் தமிழ்ப்பெண்களுக்கெனச் சிறப்பாகமுதன்முதலாக நடத்தப்படுகின்ற இந்தக் கருத்தரங்குத் தொடர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது

இதழியல் அறிவு வெகுசனத் தொடர்பாடல் அறிவு, முதலியவற்றை வழங்குவதற்கு கூட்டுறவுத்துறையினர் மேற்கொள்ளும் இந்த முயற்சி பாராட்டுதற்குரியது.

எமது நாட்டுச் செய்தித் தொடர்பாடல் வளர்ச்சியில் மொழியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் கூறவேண்டியுள்ளது அடிப்படை இலக்கண வழுக்கள் நிரம்பியதமிழ் மொழிப் பிரயோகம் கூச்சமின்றி பயன்படுத்தப்படுகிறது.

இந்தியச் செய்தி அறிக்கைகளில் அடிப்படைத்தமிழ் இலக்கண விதிகள் இயன்றளவுபின் பற்றப்படுகின்றன

ஆனால் இலங்கையில் அவ்வாறு பின்பற்றப்படுதல் அரிது உதாரணமாக எழுவாய் பயனிலையாக அமைய பயனிலையை ஒருமையில் முடிக்கின்றார்கள்

திணை, பால் பாகுபாடுகளில் பெருமளவு வழுக்கள் காணப்படுகின்றன. உதாரணமாக 'நூலை எழுதியது அகிலன்' என்று கூறுகின்றார்கள். நூலை எழுதியவர் அகிலன் என்றேவருதல்வேண்டும் 'நடக்கப்பட்டது' என்பதைநடாத்தப்பட்டது என்று தவறாக எழுதுகின்றனர்.

எமது நாட்டு ஒலி, ஒளி பரப்புக்களால் இவ்வாறு பெருமளவு அடிப்படை இலக்கண வழுக்கள் காணப்படுகின்றன.

இதழியலில் பயிற்சி பெறுவோர் இவ்வாறன வழுக்கள் பற்றி தெரிந்தும் விளங்கியுமிருத்தல் நன்று.

# மாணவன் திவ்வியனை தாயார் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறைப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ள யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனும் மாணவர்மன்ற ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான கிருஷ்ணசாமி திவ்வியனை நேற்று அவரதுதாயார் நேரில்சென்று பார்வையிட்டுள்ளார்.

திவ்வியனின் தாயார் திருமதி கிருஷ்ணசாமியுடன் யாழ் பல்கலைக்கழகத்துணை வேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆசிரியசங்கபிரதிநிதி பேராசிரியர் சிற்றம்பலம், பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத் தலைவர் கஜேந்திரன் ஊழியர் சங்கபிரதிநிதி சகாயநாதன் ஆகியோரும் உடன்சென்றிருந்தனர்.

திவ்வியனின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அமைக்கப்பட்ட நால்வர் அடங்கியகுழுவினர் திவ்வியனைவிடுதலை செய்வதற்கு முயற்சிஎடுத்துவருவதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# பட்டம் வழங்கி கௌரவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் பன்னிரு தினங்கள தொடர் சொற்பொழிவாற்றியமைக்காக புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர் சந்திர மௌலீசன் லலீசனுக்கு 'சைவத்தமிழ் சொல்லழகன்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சிவமகாலிங்கம் உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது (க)

# அங்குரார்ப்பண கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைப்பணியாளர்களினை இணைத்து சங்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அந்தவகையில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 00 மணியளவில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மேற்படி சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இடம்பெறவுள்ளது (க-75)

# வீதி அகலமாக்கல்

நல்லூர்

நல்லூர்ப் பிரதேச சபையினர் திருநெல்வேலிச் சந்தியிலிருந்து மேற்குப்புறமாக, மருத்துவபீடப் பகுதியால் கொக்குவிலுக்குச் செல்லும் ஆடியபாதம் வீதியை அகலப்படுத்துவதற்கான நடவடிக்கையைமேற்கொண்டுள்ளனர்

இவ்வீதி அகலப்படுத்தப்படுவதன் மூலம் பொது மக்களின் பிரயாணச்சிரமம்நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-103)

# மரணதண்டனை கூடுதலாக வழங்கும் நாடு சீனாவே

## மனித உரிமைகள் அமைப்பு தெரிவிப்பு

(பீஜிங்)

சீனாவில் கடந்த மூன்று மாதங்களில் ஆயிரத்து எழுநூற்று எண்பத்தொரு பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருப்பதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது

உலகிலேயே மரணதண்டனைகள் அதிகளவில் வழங்கும் நாடு சீனாவெனவும், சீனா மரண தண்டனைகள் வழங்குவதை குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும், மேலும் தீர்ப்பு வழங்கப்பட்டு மரண தண்டனைக்காக காத்திருப்பவர்களின் தொகை 2 ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுபேராகுமெனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# கலைஞர் கருணாநிதி கைது

# தமிழக பொலிஸார் மீது விசாரணை

# அரசு திடீர் உத்தரவு

(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி உட்பட பலரது அத்துமீறல் கைதுக்கு பொலிஸ் அதிகாரிகள் மீது நீதிவிசாரணை நடத்த தமிழ்நாட்டரசு உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் தமிழக ஆளுநரும் முதல்வர் ஜெயலலிதாவும் சந்தித்ததைபடுத்து மத்திய அரசின் எச்சரிக்கையை அடுத்தும் தமிழக அரசு காவல்துறையினர் மீது நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் சி இராமன் விசாரணைக்கு தலைமை தாங்குவார்:

விசாரணை அறிக்கையை மூன்று மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கலைஞர் மு.கருணாநிதி கைதுக்குப் பிறகு தமிழ் நாடு அரசு எடுக்கும் முதல் நடவடிக்கை இதுவாகும் எனக் கூறப்படுகிறது. (து)

### தீ மூட்டப்பட்டன

சைப்பிரஸில் உள்ள பிரிட்டிஷ் இராணுவத் தளத்தில் அமைக்கப்பட்டிருந்த தொலைத் தொடர்பு கோபுரங்கள் அத்துமீறி நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ மூட்டப்பட்டுள்ளன.

இத் தொலைத் தொடர்பு கோபுரங்களால் சூழல் மாசடைகிறது என்பதனாலேயே ஆர்ப்பாட்டம்இடம்பெற்றுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தை இராணுவம் கண்டுகொள்ளாததால் தீ மூட்டப்பட்டது என்றும் அந்நாட்டு சூழல் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது. (உ-7)

### உபகரணங்கள்
## வழங்கல்

(மந்திகை)

வரணி ஆசிரியபயிற்சி நிலையம் பளை மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு றோனியோ, நிழற்பட பிரதி எடுக்கும் இயந்திரம், தட்டச்சு இயந்திரம் ஆகிய உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன;

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இவ் உபகரணங்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(க-23)

### ஆசிரியர்களுக்கான
## செயலமர்வு இன்று

(செம்பியன்பற்று)

இடைநிலை வகுப்புகளில் கல்விகற்பிக்கும் வடமராட்சி வலய ஆசியர்களிற்கான வாழ்க்கைத் தேர்ச்சி செயலமர்வு இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை நெல்லியடியிலுள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது,

எதிர் வரும் 11 ஆம்திகதி புதன்கிழமை தரம் 3 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான ஆரம்பக்கல்வி செயலமர்வு நடைபெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது;

(க-42)

### யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் கசிப்பு உற்பத்தி
# தகவல் வழங்க பொதுமக்கள் தயக்கம் காட்டக் கூடாது

### யாழ். பொலிஸ் அதிகாரி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வெகுவாக அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தி மற்றும் இதர சமூக விரோத செயல்கள் தொடர்பாக பொது மக்கள் தயக்கமின்றி பொலிஸாருக்கு தகவல் வழங்கலாமென யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குடாக்ஹெட்டி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், நேரடியாக பொலிஸாருக்கு முறையிட பொதுமக்கள் எதுவித அச்சம் கொள்ளத் தேவையில்லையென்றும்கடிதம் மூலம் தொடர்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் தமிழ் மொழியிலும் கடிதம் எழுதலாம் என்றும் தெரிவித்தார்.

சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மட்டுமல்ல, குழுக்களாக செயற்படும் திருட்டுக்கள் மற்றும் தவறான முறையில் பெண்களைப் பயன்படுத்தும் சம்பவங்கள் குறித்தும் தகவல் தருமாறு பொலிஸ் அதிகாரி கேட்டுக் கொண்டார்.

பொதுமக்களின்பூரண ஒத்துழைப்புடனேயே இது போன்ற சமூக விரோதச் செயல்களை தடுத்து நிறுத்த முடியும் என்றும் அழுத்தப்| திருத்தமாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

கடமையில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களும் தவறான முறையில் செயற்பட்டால் அது தொடர்பான விடயங்களை யாழ்.பொலிஸ் நிலைய அதிகாரிக்கு தெரியப்படுத்துமாறும், மக்கள் ஒத்துழைப்பு வழங்கும்பட்சத்திலே இவ்வாறன சம்பவங்களை நாட்டில் இருந்து ஒழிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

]க-10[

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

ஜுன் மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன

| | |
|---|---|
| 195460 ஏ | 195462 பி |
| 195462 சி | 195465 ஏ |
| 195465 பி | 195465 சி |
| 195465 டி | 195481 ஏ |
| 195481 பி | 195484 ஏ |
| 195498 ஏ | 195504 ஏ |
| 195505 ஏ | 195505 பி |
| 195518 ஏ | 195519 ஏ |
| 195519 பி | 195526 ஏ |
| 195526 பி | 195528 ஏ |
| 195528 பி | 195536 ஏ |
| 195537 ஏ | 195537 பி |
| 195548 ஏ | 195550 ஏ |
| 195554 ஏ | 195554 பி |
| 195554 சி | 195866 ஏ |
| 195600 ஏ | 195600 பி |
| 195707 ஏ | 195721 ஏ |
| 195728 ஏ | 195736 ஏ |
| 195737 ஏ | 197204 ஏ |
| 197215 ஏ | 197222 ஏ |
| 197223 ஏ | 197223 பி |
| 197237 ஏ | 197246 ஏ |
| 197269 ஏ | 197269 பி |
| 197279 ஏ | 197295 ஏ |
| 197295 பி | 197297 ஏ |
| 197300 ஏ | 197302 ஏ |
| 197302 பி | 197311 ஏ |
| 197324 ஏ | 197335 ஏ |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 195447 ஏ | 195464 ஏ |
| 195464 பி | 195464 சி |
| 195570 ஏ | 195570 பி |
| 195579 ஏ | 195613 ஏ |
| 1956 3 பி | 195721 எப் |
| 195721 ஜி | 195721 எச் |
| 195721 ஜே | 195748 ஏ |
| 195748 பி | 197228 ஏ |

**நல்லூர்**

| | |
|---|---|
| 173614 ஏ | 1845 5 ஏ |
| 184505 பி | 185977 ஏ |
| 185977 பி | 189694 ஏ |
| 189694 பி | 189694 சி |
| 189694 டி | 189694 ஈ |
| 189722 ஏ | 189722 பி |
| 190883 ஏ | 190931 ஏ |
| 190931 பி | 190931 சி |
| 191008 ஏ | 191008 பி |
| 191008 சி | 191178 ஏ |
| 193073 ஏ | 193234 ஏ |
| 193234 பி | 193234 சி |
| 193234 டி | 193234 ஈ |
| 193234 எப் | 193375 ஏ |
| 194425 ஏ | 195186 ஏ |
| 195219 ஏ | 195219 பி |
| 195245 ஏ | 195245 பி |
| 155253 ஏ | 195253 பி |
| 195254 ஏ | 195254 பி |
| 195278 ஏ | 195278 பி |
| 195278 சி | 195278 டி |
| 195278 ஈ | 195278 எப் |
| 195278 ஜி | 195426 ஏ |
| 195428 ஏ | 195430 ஏ |
| 195430 பி | 195431 ஏ |
| 195431 பி | 195431 சி |
| 195431 டி | 195431 ஈ |
| 195432 ஏ | 195432 பி |
| 195432 சி | 195443 ஏ |
| 195462 ஏ | 195480 ஏ |
| 195490 ஏ | 195490 பி |
| 195490 சி | 195490 டி |
| 195490 ஈ | 195517 ஏ |
| 195517 பி | 195530 ஏ |
| 195530 பி | 195534 ஏ |
| 195539 ஏ | 195539 பி |
| 195549 ஏ | 195542 ஏ |
| 195556 ஏ | 195556 பி |
| 195556 சி | 195568 ஏ |
| 195568 பி | 195700 ஏ |
| 195719 ஏ | 195726 ஏ |
| 195726 பி | 195738 ஏ |
| 19574! ஏ | 197203 ஏ |
| 197203 பி | 197213 ஏ |
| 197214 ஏ | 197217 ஏ |
| 197217 பி | 197217 சி |
| 197249 ஏ | 197254 ஏ |
| 197273 ஏ | 197273 பி |
| 197273 சி | 197296 ஏ |

## பின்னுறுதித் தீர்வை
### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

**முருகேசு கந்தசாமி பெண் வேலுப்பிள்ளை மகள் பத்மலட்சுமி**
அல்லாரை வடக்கு, கொடிகாமம்
தற்போது மே/பா **திருமதி சிவமணி கணேசமூர்த்தி, 'இந்திரவாசா'**
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
வழக்காளி

வழ. இல:/239 மணநீக்கம்
எதிர்
**முருகேசு கந்தசாமி**
அல்லாரை வடக்கு, கொடிகாமம்.
எதிராளி

இவ் வழக்கு 2001ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. இ. த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் வழக்காளியின் சார்பில் வழக்காளியின் சட்டத்தரணி திருமதி. பவானி சற்குணராசாவும் சமூகமாயிருக்க 22-5-2001ம் திகதியன்று ''வலம்புரி'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எதிராளியின் அழைப்புக் கட்டளைக்கு எதிராளி இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தையும், பிராதுடன் அணைக்கப்பட்ட ஆவணம் வ, 1இணையும் மன்று நன்கு பரிசீலனை செய்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதி உடையவர் எனக்கருதி பின்வருமாறு சட்டளையிடப்பட்டு பின்னுறுதி தீர்வையளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1988ம் ஆண்டு ஆவணி மாதம் 24ம் திகதி நடைபெற்ற திருமணத்தை இத்தால் ரத்துச் செய்து வெற்றும் வெறிதுமான தாக்கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையளிக்கப்படுகின்றது

மேலும், இவ்வழக்காளி தன் கன்னிப் பெயரைப் பாவிக்கவும், திருமணமாகாத பெண்ணின் சகல உரிமைகளுக்கும் உரித்துடையவரெனவும் இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வை ''வலம்புரி'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இப்பின்னுறுதித் தீர்வையானது ஏன் முற்றான தீர்வையாக்கப்படக் கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் காட்டப்படாதவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்த தன் பின்னர் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2001ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி

மன்றின் கட்டளைப்படி
**து. சிறீமோகன்**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்;

வரைபு
**பவானி சற்குணராசா**
வழக்காளியின் சட்டத்தரணி

ஒப்பம்
**இ. த. விக்னராஜா**
மாவட்ட நீதிபதி,
யாழ்ப்பாணம்.

[C/2189]

### உருவப்படங்கள்
## திறந்துவைப்பு

(சுண்டுக்குளி)

சுவாமி ஞானப்பிரகாசர், வண. தனிநாயகம் அடிகள் ஆகிய பெரியார்களின் திரு உருவப்படங்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டன.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, சுவாமி ஞானப் பிரகாசரின் திருவுருவப் படத்தையும் தென்னிந்திய திருச்சபை ஆயர் மேதகு ஜெபநேசன் ஆண்டகைவண தனிநாயகம் அடிகளாரின் உருவப்படத்தையும் திறந்து வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழககிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் அருள் திரு அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் மேற்படி நிகழ்வு இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

(க-110)

## விளையாட்டு
### உபகரணங்கள்
## அன்பளிப்பு

(செம்பியன்பற்று)

வடமராட்சி வலய பெரும்பாலான பாடசாலைகளிற்கு யுனிசெவ்நிறுவனம் பெறுமதி வாய்ந்த, விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளது.

இதில் கரம்போட், செஸ்போட், கிறிக்கெட், விக்கெட், வற்மின்ரன் பேன்ற பத்தாயிரம் ரூபாவிலும் அதிகமான பொருட்களை வழங்கியுள்ளது.

(க-42)

### பசு வதையைத் தடை செய்தல் தொடர்பாக
# யாழ். மாநகர சபையில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாநகர முதல்வரது ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில், யாழ். மாநகர அதிகாரிகள், பசுக்கள் இடபங்களை பாதுகாப்பதற்கான அனைத்து சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் ஆகியோர் பங்கு பற்றிய 'பசுவதையை யாழ் மாநகரசபை எல்லையுள் தடைசெய்வது தொடர்பான கலந்துரையாடல்' ஒன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ் மாநகர அதிகாரிகளுக்கும் தெய்வீகப் பசுக்கள் இடபங்களை பாதுகாப்பதற்கான சகலசமயநிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கீழ் வரும் விடயங்களில் இணக்கம் காணப்பட்டதுடன் இவ் விடயங்களை செயற்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் மாநகரசபை அதிகாரிகள் உறுதியளித்தனர்.

★ மாநகர எல்லையுள் புதிதாக மாட்டிறைச்சிக் கடைகள் கொல்களங்களை அமைப்பதாயின் அவை குறித்து அப்பகுதியிலுள்ள சமய சமூக நிறுவனங்கள், குருமார்கள், ஆலயங்கள் பொதுமக்களது ஒப்புதலை பெற்ற பின்பே அவற்றை ஆரம்பித்தல் வேண்டும்;

★ மாநகர எல்லையுள் இயலுமானவரை பசுக்கள் கொல்லப்படுவதை தவிர்க்க உடன் நடவடிக்கைஎடுப்பது:

★ மாநகர எல்லையுள் பொருளாதார ரீதியாகவும் தெய்வீகமாகவும் பல பயன்களைத்தரும் பசுமாடுகளை 1990 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தது போல யாழ் மாநகர சபை எல்லையுள் கொல்லக்கூடாது எனமாநகர சபையில் தீர்மானமொன்றை அடுத்த மாநகரசபைக் கூட்டத்தில் எடுப்பதுடன் யாழ் மாநகர எல்லையுள் பசு வதையை தடைசெய்வது:

பணவருவாயை மட்டும் நோக்காகக் கொண்டுமாட்டு இறைச்சிக் கடைகள், மற்றும் கொல்களங்களை இந்து சமய பீடாதிகளின் ஆலோசனை பெறாமல் சில பிரதேச சபைகள் ஆரம்பிப்பது குறித்தும் ஆழ்ந்தகவலை தெரிவிக்கப்பட்டது.

இந்து சமய பண்பாடுகள், கலாசாரம் என்றுமில்லாத வகையில் சீரழிந்து வருவது குறித்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கோப்பாய் பிரதேச சபை பசுவதை விடயத்தில் முன்மாதிரியான வகையில் செயற்படுவது குறித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

வலி வடக்கு பிரதேச சபை தனது எல்லைக்குட்பட்ட அளவெட்டி மாட்டு இறைச்சிக் கடையை மூடிவித்தமைக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

வேதாந்த மடம் சிவகுருநாதபீடாதிபதி, பசுப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுச் செயலாளர் ப. சிவலோகநாதன் உட்பட பலரும் கருத்துரையாற்றினர்.

(க)

## அடிக்கடி மின்வெட்டு

[யாழ்ப்பாணம்]

பல்கலைக்கழக சுற்றாடல், பிரதேசங்களான திருநெல்வேலி, கொக்குவில், பொற்பதி, தாளையடி வீதிப் பகுதிகளில அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகின்றது. இதனால் இப்பகுதிகளில்தங்கியிருந்து கல்வியைத் தொடரும் மாணவர்கள் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது;

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தபல்கலைக்கழக மாணவர்களே அதிகமாக இப்பகுதிகளில் தங்கியிருந்து கல்வியைத் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

[க-104]

# இன்றைய கலாசார சீரழிவிற்கு இளைஞர் சமூகமே காரணம் எனக் கூறுவது

# எப்போதும் பொருந்தக் கூடியதல்ல

## வைத்திய கலாநிதி தவஜோகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இளைய தலைமுறையினர் இப்போது முற்றாகச்சீரழிந்துவிட்டார்கள். முன்னெப்போதும் இல்லாதவாறு அவர்கள் அளவுக்கதிகமாக கலாசாரச் சீரழிவுகளை மேற்கொள்கின்றார்கள்; மிகவும் மோசமானவர்களாக மாறிவிட்டார்கள் என்று அவர்களின் மேல் தவறான முத்திரை குத்துவதை முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாது என வைத்திய கலாநிதி சா. தவஜோகன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று அகவொளியில் நடைபெற்ற முழு நிலாக்கருத்தரங்கில் "இன்றைய யாழ்ப்பாண இளைய தலைமுறையினர்", என்ற தலைப்பின்கீழ் கருத்துரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது;

இளைய தலைமுறையினர் எனக் கருதப்படும் கட்டிளமைப் பருவத்தினர் தமது ஒவ்வொரு செயல்களையும் இந்தச் சமூகத்தின் பிரதிபலிப்புக்களாகவே வெளிப்படுத்துகின்றனர்.

எனவே இந்த சமூகத்தில் உள்ள பெரியவர்கள், தலைவர்களது நடத்தைக்கு ஏற்றவாறே அவர்களது செயல்களும் மாற்றமடைகின்றன.

அது அவர்களுக்குரிய பாணியில் வெளிப்படும்போது சகிக்க முடியாததாக வெளிப்படுகிறது.

அத்துடன், இவ வயதினரிடையே தற்போது அதிகரித்துக்காணப்படும் வன்முறைப் போக்கும், வக்கிரப் போக்கும் அவர்களது பிரதிபலிப்புகளில் கலந்திருப்பது துர்ப்பாக்கிய நிலை தான் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆனால், இப் போக்கிற்கு உளவியல் ரீதியான காரணம் தேடமுற்பட்டால், இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் கோர யுத்தமும் "வாழ்வில் பற்றற்ற நிலையும்" நீண்டகால இலட்சிய நோக்கு அற்றுப்போன தன்மையையும் நாம்கூற முடியும். எனவே இவ்வயதினரிடையே காணப்படும் மோசமான நிலைக்கு பெரியவர்களும் ஏதோ ஒரு விதத்தில் காரணமாக இருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஆகவே, பெரியவர்கள் தங்களது ஒவ்வொரு செயலையும் மிக அவதானமாக, எதிர்கால சந்ததியின் நலன்கருதி தெளிவான போக்கில் முன்னெடுப்பார்களேயானால் இந்த நிலைக்கு ஓரளவு தீர்வு ஏற்படவாய்ப்புள்ளது.

இதைவிடுத்து எமது இளைஞர்கள் "எம்மைப்போல இல்லை நாம்முன்பு இருந்தது போல் இல்லை" என்று பெரியவர்கள் கூறவிழைவது முரண்பாடுகளைத் தான் தோற்றுவிக்கும். (உ-9)

## அத்தியடி டாக்டரின் மகன் கொழும்பில் குத்திக் கொலை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீதேவா கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து கத்தியால் குத்தப்பட்டு படுகாயமடைந்துள்ளார் அவரதுமகனான நிரோஷன் [வயது-27] கொள்ளையர்களின் கத்திக் குத்திற்கு இலக்காகி ஸ்தலத்திலேயே பலியான சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

கத்திக்குத்திற்கு இலக்காகி உயிரிழந்த நிரோஷன் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவராவார்.

இச்சம்பம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

தெஹிவளையில் தனியார் மருத்துவமனை ஒன்றை நடாத்திவரும் டாக்டர் ஸ்ரீதேவாவை கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில்வைத்து முகமூடி அணிந்த கொள்ளையர்கள் கத்தியால்குத்தி கொலை செய்ய முயற்சிப்பதைக்கண்ட மகன் நிரோஷன் அதை தடுத்த போதே கத்தியால் குத்தப்பட்டு பலியானார்.

கத்திக்குத்தில்காயமடைந்த டாக்டர் ஸ்ரீதேவாதற்போது கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

டாக்டர் ஸ்ரீதேவா வெளிநாடுசெல்ல திட்டமிட்டிருந்ததாகவும் அதனால் தெஹிவளையில் உள்ள வீட்டை விற்று பணம் வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## 82 நோயாளர் வவு. வருகை

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பகுதிகளிலிருந்து கடந்த வாரம் 82 நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு வந்ததாகவும் இதேகாலப்பகுதியில் சிகிச்சைபெற்ற 84 நோயாளர்கள் மீளவும் வன்னிக்கு திரும்பியுள்ளதாகவும் விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ந-9)

## முன்பள்ளிகள் புனரமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் உள்ள 5 முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி மூலம் சுமார் 5 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த 5 முன் பள்ளிகளின் நிர்வாகிகளையும் பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் புலோலி பொது நூலகத்திற்கு அழைத்து முன்பள்ளிகளின் அபிவிருத்தி மேம்பாடுகள் பற்றிக் கலந்துரையாடியுள்ளார்.

கூவில் தீபஜோதி முன்பள்ளி கட்டட நிர்மாணத்திற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தும்பளை உதய சூரியன் முன்பள்ளிப் புனரமைப்புக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் சுப்பர்மடம் சித்திவிநாயகர் முன்பள்ளி தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், கற்கோவளம் முன்பள்ளி தளபாடக் கொள்வனவுக்கு 90 ஆயிரம் ரூபாவும் அல்வாய் நக்கீரன் முன்பள்ளி தளபாட கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன; (உ-52)

## மணற் காட்டில் மாணவர் அவதி விளையாட்டு முற்றம் இல்லை

(செம்பியன்பற்று)

மணற்காடு றோ. க. த. க பாடசாலை மாணவர் விளையாட்டு முற்ற வசதியின்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது விடயம் சம்பந்தமாக பருத்தித்துறை பிரதேச சபை, வடமராட்சி கிழக்கு மணல் அகழ்வு செய்யும் உழவு இயந்திர உரிமையாளர் சங்கம், வடமராட்சி வலயம் ஆகிய அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டும் எதுவித பயனும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வண்.சிவன்கோவிலடி வடிகால்களில் அசுத்தநீர் தேக்கம் நுளம்புகள் பெருக்கம்

(நல்லூர்)

யாழ்.வண்ணார்பண்ணை சிவன்கோவிலடிப் பகுதியின் வடக்குவீதி, தெற்கு வீதி வடிகால்களில் அழுக்குநீர் தேங்கிக் காணப்படுவதால், துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு பெருகி வருவதாகவும், சுகாதாரம் பாதிக்கப்படுவதாகவும், அப்பகுதிப் பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாவலர் சந்திப் பகுதியில் சில வீதி ஓரங்களிலும் குப்பைகள் பெருமளவில் கவனிப்பாரற்று காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-103)

## எம் மண்ணின் கலைகளான சுதேச விளையாட்டுக்கள் பரவலாக்கப்பட வேண்டும்

### கலாநிதி சண்முகலிங்கன் தெரிவிப்பு

(தென்மராட்சி)

குடியேற்ற நாடாதிக்கம் விட்டுப் போன மேலைவிளையாட்டுக்களுக்குள் மட்டுப்படாமல் எங்கள் மண்ணின் வெளிப்பாட்டுக் கலைகளான சுதேச விளையாட்டுக்களை பரவலாக்கவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறைத் தலைவரும் பல்கலைக் கழக தாச்சித் தேசியவிளையாட்டு முகாமையாளருமான கலாநிதி என். சண்முகலிங்கன் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற தாச்சி சுற்றுப் போட்டி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்;

விளையாட்டு அலகின் இணைப்பாளர் எஸ் கணேசானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கலாநிதி சண்முகலிங்கன் தொடர்ந்து பேசுகையில்;

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 'கிளித்தட்டு' என எங்கள் கிராமத்தில் பயிலப்படும் 'தாச்சி' சுற்று விளையாட்டினை அறிமுகம் செய்து மிகச்சிறப்பாக அதனைப் பிரபலப்படுத்த முடிந்ததையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்; முதன் முதலாக 'தாச்சி' சுற்றுப் போட்டியொன்றினையும் எம் மாணவர்கள் சிறப்புற ஒழுங்கு செய்து வெற்றி கண்டுள்ளமை பெருமகிழ்ச்சி தருகின்றது. எனக் குறிப்பிட்டார்.

இப் போட்டியில் பெண்கள் அணியில் பல்கலைக்கழக மகளிர் அணியும், ஆண்கள் அணியில் கோண்டாவில் அண்ணா விளையாட்டுக்கழகமும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

வெற்றி பெற்ற அணிகளுக்கான கேடயங்களையும் வெற்றிக் கிண்ணங்களையும் திருமதி கௌரி சண்முகலிங்கன் வழங்கினார். [க-77]

## அரச ஊழியர்கள் சம்பள முற்பணக் கடன் பெறுவதில் சிக்கல்நிலை

### அமைச்சரிடம் முறையீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சம்பள முற்பண கடன்கள் பெறுவதில் உள்ள சிரமங்கள் உள்நாட்டு அலுவல்கள் பொது நிருவாக அமைச்சர் ரிச்சட் பத்திரானாவிற்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இலங்கை பொது ஊழியர் சங்கம் மேற்படி விடயத்தை அமைச்சரின் கவனத்திற்கு எடுத்துக்காட்டி மத்திய அரசே பிரதேச செயலக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதாகவும் ஆனால் சம்பள முற்பணக் கடன் மட்டும் மறுக்கப்படுவதாகவும் பொது ஊழியர் சங்கச்செயலாளர் க. நடராசா சுட்டிக் காட்டியுள்ளார். (த)

### தீவிர சோதனை

கொக்குவிலில் மற்றும் அதனை அண்டிய நந்தாவில் பொற்பதிப் பகுதிகளில் படையினரின் ரோந்து, சோதனை நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது [க-104]

# இராசி பலன்

9.07 2001

(ஆனி 25 திங்கள்)

சதுர்த்தி பி.இ 3 43 வரை
அவிட்டம் பி.ப 5 49 வரை
ராகுகாலம் 7 28-8.58
நல்லநேரம் 11 58-1 28
சித்தம், சங்கடகர சதுர்த்தி

**மேடம்**

சென்ற இடத்தில் சிறப்பு, தனலாபம், கீர்த்தி, குடும்ப சுகம்.

**இடபம்**

கடின உழைப்பு, மேன்மை, முயற்சி கைகூடும், தொழில் வெற்றி;

**மிதுனம்**

கட்டுப்பாடு, உடல் உபாதை, பிரயாணம், உஷ்ண வியாதி.

**கடகம்**

வீண் பிரச்சினை, காரிய தடங்கல், போஷன சுகம், பெரியோர் வெறுப்பு;

**சிங்கம்**

நண்பர்கள் சந்திப்பு, வாகன வசதி, திடீர் சந்திப்பு, காரிய நன்மை;

**கன்னி**

முயற்சி விருத்தி, தர்மம் மனமகிழ்வு, சத்துரு ஜெயம்;

**துலாம்**

கௌரவக் குறைவு, தொழில் வெற்றி, புத்திரரால் சோகம், நிலைமாற்றம்.

**விருச்சிகம்**

உடல் நலக்குறைவு, அற்பர் உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சி தாமதம்;

**தனுசு**

இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, காரிய நன்மை.

**மகரம்**

விதண்டாவாதம், மதிப்புக் குறைவு, பொருள் விரயம், காரியம் கைகூடும்;

**கும்பம்**

நல்ல சிந்தை, சயன சுகம் பெரியோர் மதிப்பு, முயற்சி கைகூடும்;

**மீனம்**

வீண் அலைச்சல், பொருள் விரயம், அமைதிக்குறைவு, அதிகாரம்;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பொலிஸார் கடமையில்

(நல்லூர்)

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் - (சந்தியில்) காலை 7 மணி முதல் 9 மணி வரை பொது மக்களின் நலன் கருதிப் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடன் நல்லூர்ப் பிரதேச சபையின் ஊழியர்களும் பணிபுரிந்து வருகின்றனர் (க-103)

## மாலை நேர வகுப்புக்கள்

[நல்லூர்]

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில், அதிபர் ஆசிரியர்களால், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி, மாலை நேர வகுப்புக்கள் நடத்தப் பெற்று வருகின்றன. 6 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையிலான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-103)

## இன்று ஒரு தகவல்

# கடலுக்குள்ளும் எரிமலை

1963 ஆம், வருடம் நவம்பர் மாதத்தில் ஒருநாள் அதிகாலை நேரம் இன்னமும் இருள் சூழ்ந்திருக்கிறது. சரியாக விடியவில்லை. ஐஸ்லிவர்-11 என்கிற மீன்பிடிப் படகு கடலில் போய்க் கொண்டிருக்கிறது. ஜெய்ர் பிரிக்லாஸ்கர் என்கிற இடத்துக்கு மேற்கே 'வெஸ்ட்மான்' என்கிற தீவுகளின் தெற்கு முனைக்கு அப்பால் ஒரு இடம் அங்கே தான் அந்த மீன் பிடிப்படகு போய்க் கொண்டிருக்கிறது மீன்பிடிப்பதற்காக வலைகளைக் கடலிலே விரித்து விட்டது. அந்தச் சமயத்தில்தான் அவ் அதிசயம் நடந்தது. என்ன ஆனது தெரியுமா?

திடீரென்று கடல் அலைகளெல்லாம் சீறி எழுந்தன. படகு சன்னா பின்னா என்று தள்ளாட ஆரம்பித்தது படகில் இருந்த மீனவர்கள் தென் கிழக்கில் உள்ள கடற்பகுதியைப் பார்த்தார்கள் அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை அபபேர்ப்பட்ட ஆச்சரியம் ஒன்று அங்கே நிகழ்ந்துகொண்டிருக்கிறது கடற் பரப்புக்கு மேலே புகை சீறிவந்துகொண்டிருக்கிறது. புகைமட்டுமில்லை... ஆவி, சாம்பல், பாறைத் துண்டுகள் இப்படி என்னவெல்லாமோ வந்து கொண்டிருக்கிறது இவையெல்லாம் என்னமெதுவாகவா வந்து கொண்டிருக்கின்றன?

மிகவும் வேகமாக வருகின்றன; கடற் பரப்புக்கு மேலே நூற்றுக் கணக்கான மீற்றர் உயரத்துக்கு மேலே தன்பாட்டில் சர்! சர்! என்று போய்க் கொண்டிருக்கிறது. அடுத்த 48 மணிநேரத்தில், அந்த இடத்தில் கடல் மேற்பரப்பில், சின்ன மலைமேடு உருவாகி விட்டது அவ்வளவுதான் அது அப்படியே ஒரு தீவாக ஆகிவிட்டது. அதாவது மீன் பிடிக்கப் போனவர்கள் கண்முன்னாலேயே ஒரு தீவு உண்டானதைப் பார்த்திருக்கிறார்கள்.

இது எப்படி நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள். எரிமலைகள் பூமியிலே தான் இருக்கிறதென்று நினைக்காதீர்கள். கடலுக்கு அடியிலேயும் இருக்கின்றன. கடலுக்கு அடியில் இருக்கிற எரிமலையும் வெடிக்கும் சீறும்- குமுறும்! எரிமலைக் குழம்பு பொங்கி கடலுக்கு மேலே வந்து விடும். அது அப்படியே பரவி தீவாக ஆகிவிடுகிறது. இப்படி உருவாகும் தீவுகள் பொதுவாக நிலைத்து இருக்கிறதில்லை. காலப் போக்கில் கடல் அலைகள் அடித்துக்கொண்டுபோய் விடும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

ஆனால்..இப்போதுபேசிக் கொண்டிருந்தோமே அந்த தீவு அப்படி ஆகாது போல இருக்கிறது. ஏனென்றால், இந்தச் சம்பவம் நடந்து சரியாக மூன்று மாதம் கழித்து மறுபடியும் அதே தீவில் முன்னர் வெடித்த எரிமலைவாய்க்குப் பக்கத்திலேயே இன்னொரு எரிமலை வெடித்தது முன்பு வெடித்ததை விட அதிகமான எரிமலைக் குழம்பு பொங்கி வந்துவிட்டது அதே தீவின் மேற்பரப்பில் பரவிப் படிந்து அந்தப் பரப்பை இன்னும் உறுதியடையச் செய்து விட்டது 1967 ல் எரிமலைசீற்றம் முற்றாகநின்று போனது இன்றைக்கு அது ஒரு அழகான தீவாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் தீவுக்கு 'சர்ட்சி' என்று பெயரும் வைத்து விட்டார்கள்.

இது என்ன பெயர் என்கிறீர்களா? இந்தத் தீவு ஐஸ்லாந்தின் தென் மேற்குக் கடற்கரைக்கு அப்பால் இருக்கிறது. ஐஸ்லாந்தில் ஒரு புராணக்கதை உண்டு. அந்தப் புராணத்தில் 'நெருப்பு அரக்கன்' ஒருத்தன் உண்டாம். அவன் பெயர் சர்ட்டரீ அவன் ஞாபகார்த்தமாக இந்தத் தீவுக்கு 'சர்ட்சி' என்று பெயர் வைத்து விட்டார்கள் சர்ட்சி தீவில் இயற்கை ஆராய்ச்சிக் கூடம் ஒன்றில் உயிர்கள் எப்படி உருவாகிறதென்ற ஆராய்ச்சி செய்கிறார்களாம். பத்துவருடத்துக்குள் தாவர விதைகள் எல்லாம் கடலில் மிதந்து அந்தத் தீவுக்கு வந்து செடி, கொடிகளும் நிறைய உண்டாகிவிட்டதாம். இப்போது அந்த தீவு மிகவும் அழகாக இருக்கிறதாம், போய்ப் பார்த்து விட்டு வர ஆசையாகத்தான் இருக்கிறது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மாட்டு இரத்தம் வாங்கும் இழிநிலை யாழிலிருந்து அகற்றப்பட வேண்டும்

## கந்தர்மடம் வேதாந்த குருபீடாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள சில கொல்களங்களில் சென்று வாளிகளில் மாட்டு இரத்தம் வாங்கும் நிலையில யாழ். மாவட்டப் பெண்கள் உள்ளனர். இது ஒரு வேதனையும் வெட்கமும் தரும் ஒரு செயலாக உள்ளதெனகந்தர்மடம், வேதாந்த மடத்தில் அதன் குருபீடாதிபதியான ஸ்ரீமத் சோமாஸ் கந்தவேள் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

பசுவதை தொடர்பாக நேற்று முன்தினம் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே சுவாமிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில்:

'சிவ பூமி' எனப் போற்றப் பட்ட எமது திரு நாட்டில் சிவசின்னங்களை அணிந்து கொண்டு மாட்டு இறைச்சிக் கடைகளில் பெண்கள் வரிசையில் நின்று இறைச்சி வாங்கும் ஒரு துர்ப்பாக்கியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பெண்களே இவ்வாறு செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

மேலும் கிறிஸ்தவ சமயத்தினைப் பொறுத்தவரையில் இப்பழக்கம் பின் பற்றப்படுகிறது. அதனை தடுக்க எமக்கு உரிமையில்லை.

ஆனால் சைவர்கள் அவ்வாறான பழக்கத்திற்கு உள்ளானவர்கள் அல்ல.

தொன்று தொட்டு இப்பழக்கம் இருந்ததும் இல்லை இடையிலே இப்பசுவை வதை செய்து உண்ணும் ஒரு நிலைக்கு சைவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனினும் பசுவதையை முற்றாக நாட்டில் இருந்து அழித்தால், எவருமே இப்பழக்கத்திற்கு ஆளாகுவதை தடுக்க முடியும்.

பசுவதைக்கு எதிராக கடுமையான சட்ட திட்டங்களைக் கொண்டு வருவதன் ஊடாகவும் இதனைக் கூடிய விரைவில் கட்டுப்படுத்த முடியும்.

பசுவதை தொடர்பாக வளர்ந்து வரும் மாணவர் மத்தியில் தகுந்த அறிவுரையை வழங்குவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

இந்து சமயப் பாடப் புத்தகங்களில பசுவதையினை ஒரு பாடமாக சேர்ப்பதன் மூலம இதனை கட்டுப்படுத்த முடியும்.

### தாயை கொல்வது போன்றது

அத்துடன் பசுவை வதை செய்து உண்பது எமது தாயை வதை செய்து உண்பதற்கு ஒப்பான ஒரு செயல் ஆகும்.

இதனையே ஆன்றோர்கள் ''கோமாதா எங்கள் குலமாதா'' எனப் போற்றி வாழ்ந்தனர். அவ்வாறு வாழ்ந்த எங்கள் பூமியில் இவ்வாறான ஒரு கீழ்த் தரமான செயலை நாட்டில் இருந்து ஒழிக்ககூடிய விரைவில் சட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

### பசு ஒரு செல்வம்

பசு ஒரு செல்வம். அதனை வளர்ப்போர் தொகை யாழ். குடாநாட்டில் அருகிப் போகிறது ஏன் இதனை வளர்க்க மக்கள பின்னடிக்கின்றனரோ தெரியவில்லை,

யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் புதிதாக எந்த மாட்டு இறைச்சிக்கடைகள் திறப்பதற்கும அனுமதி கொடுககப்படவில்லை. என்பதுடன் மக்கள் மத்தியில் இவ் வதை தொடர்பாக ஒரு விழிப்புணர்வை ஏற்படுததி நடவடிக்கை எடுக்க யாழ். மாநகரசபை முழு ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்துள்ளனர் என்றார்.

மேலும இக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து சமய நிறுவனங்களின் பிரதிநிதிகளும குரு பீடாதிபதிகளும் கலந்து கொண்டு பசு வதைக்கு எதிரான தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

(ச-10-06)

## பயணிகள் அதிருப்தி

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு மஹோற்சவ காலத்தில், யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் வரைக்குமான தனியார் சிற்றூர்திச் சேவையில் அதிக கட்டணம் அறவிடப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தரப்பிலிருந்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளன. (உ-75)

## நிதி ஒதுக்கீடு

(நல்லூர்)

நல்லூர்ப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்குப் பத்திரிகைகள், பயன்தரு நூல்கள் என்பனவற்றைவழங்குவதற்காக, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 1 இலட்சம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (க-103)

## பாராட்டு விழா

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு சனசமூக நிலையத்தினால் சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி சிவ ஸ்ரீ. த. மகேஸ்வரக் குருக்களுக்கு பாராட்டுவிழா அண்மையில் நடத்தப்பட்டது.

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலய பிரதம குருவாகிய இவர். சர்வதேசஇந்து மத குரு பீடாதிபதியாகத் தெரிவு செய்ததமையையிட்டே இப்பாராட்டு விழா நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழாவன்று இரவு 10.00 மணிக்கு ஆலய வெளி வீதியில் உள்ள கலை அரங்கில் இடம்பெற்றது. (உ-75)

## தமிழ் விழா இன்று ஆரம்பம்

(திருமலை]

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மொழித் தினவிழா இன்றும் நாளையும் திருகோணமலையில் நடைபெறும்.

யாழ்ப்பாணம், திருகோணமலை. மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், கல்முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றும் இறுதிப்போட்டிகள் நேற்று நடைபெற்றது

கடந்த ஆண்டு நடைபெற்ற தேசியமட்டத்திலான தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற வடக்கு கிழக்கைச்சேர்ந்த மாணவர்களும் விழாவில் கௌரவிக்கப்படுவர். [ந-8]

க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான

## இந்துநாகரிக, இந்துசமய முன்னோடிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம இடம்பெறவுள்ள க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இந்து நாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் யா/சைவ பரிபாலன சபையினரால் இம் மாதம் 11,12 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

நாடு தழுவியதான இப்பரீட்சை, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் உள்ளிட்ட 56 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யா/வேம்படி மகளிர் கலலூரி, யா/ மத்தியகல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சைகள் இடம் பெறும் எனசைவப்பரிபாலன சபையின் பரீட்சை செயலாளர் வ. கந்தசாமி தெரிவித்தார். (உ-6)

## வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பின்வரும் பதவிகளுக்கான வினைத் திறன்காண் தடைப் பரீட்சைக்கு பரீட்சைத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை நீதிமன்ற சேவையின் 2 ஆம தர அலுவலர்,

இலங்கை நீதிமன்றப் பேச்சுப் பெயர்ப்பாளர்கள் சேவையின் 2 ஆம் தர அலுவலர்.

இலங்கை நீதிமன்றதட்டெழுந் தாளர்கள் சேவையின் 2 ஆம் தர அலுவலர்,

இலங்கை நீதிமன்ற எழுதுநர் சேவையின் 1 ஆம் தர அலுவலர்,

இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் 2 ஆம் தர அலுவலர்.

இலங்கை நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் சேவையின் 2 ஆம் தர அலுவலர்.

இலங்கை நீதிமன்ற சேவையின் எழுதுநர் சேவையின் 2 ஆம் தர அலுவலர்.

இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் 3 ஆம் தர அலுவலர்,

இலங்கை நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் சேவையின் 1 ஆம் தர அலுவலர்,

இவை தொடர்பான மேலதிக விபரங்களை ஜூலை 6 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம். (உ-3)

## தனிமையில்சென்றவயோதிப பெண்ணிடம் திருட்டு முயற்சி முறியடிப்பு

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு தேர் உற்சவத்திற்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வயோதிபப் பெண்ணின் நகைகளை அபகரிக்க திருடர்கள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

கரம்பொன் பாலக்காட்டுச் சந்திக்கு அருகாமையில் பி.ப 4.00 மணியளவில் மேற்படி வயோதிபப்பெண் தனித்து சென்று கொண்டிருந்த வேளை வழிமறித்த திருடர் நகைகளைக் கழற்றித் தருமாறு கூறி கண்களைத் துணியால் கட்டி ஆட்களற்றவீட்டுக்குள் இழுத்துச்சென்ற போது, பெண்ணின் கணவன் அவ்விடத்திற்குச் சென்றார். உடனே திருடர்கள் தம்முயற்சியைக் கைவிட்டு ஓட்டம் பிடித்தார்களாம். [உ-75]

## சீ. நோர் நிறுவனம் மீண்டும் ஆரம்பம் விரைவில் நேர்முக தேர்வு

[யாழ்ப்பாணம்]

வடகடல் [சீநோர்] நிறுவனம் மீண்டும் உற்பத்தியை ஆரம்பிக்கவுள்ளதால் இதற்கான ஊழியர்களை தெரிவு செய்யும் நேர்முகத்தேர்வு விரைவில் நடைபெறவுள்ளது.

இந் நிறுவனத்தில் முன்பு கடமை புரிந்த ஊழியர்களை எதிர் வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 தொடக்கம் 12.30 மணிவரை இடையில் பிரதிப் பொது முகாமையாளரை சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. [க-3]

# சென்னை மாநகராட்சி மன்றம் மிக விரைவில் கலைக்கப்படும்?

## சுற்று நிருபம் அனுப்பிவைப்பு

(சென்னை)

சென்னை மாநகராட்சி மன்றத்தை கலைக்கும் முயற்சியில் தமிழக அரசு இறங்கியுள்ளது நிர்வாக விடயங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அனுமதி அளிக்க மறுப்புத் தெரிவித்ததையடுத்தே சென்னை மாநகராட்சி மன்றத்தை ஏன் கலைக்கக்கூடாது என்பதற்கு உரிய காரணம் காட்டுமபடி தமிழக அரசு மாநகராட்சி நிர்வாகத்துக்கு சுற்று நிருபம் அனுப்பிவைத்துள்ளது

இதேவேளை, இது குறித்து இம் மாதம் 26 ம் திகதி நடைபெறும் மாநகராட்சி மன்றக் கூட்டத்தின் பின்பே இறுதி முடிவு எடுக்கப்படுமென மேயர் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நகர மேயர் மு. க. ஸ்ராலின் தமிழக அரசால் அண்மையில் கைது செய்யப்பட்டதும் பின்னர் விடுவிக்கப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே.

கலைஞர் கருணாநிதிக்கும் முதல்வர் ஜெயலலிதாவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள பனிப்போர் வளர்ந்து வருவதும் அதன் ஓர்கட்டமாக சென்னை மாநகராட்சி மன்றத்தை கலைக்கும் முயற்சியில் தமிழக அரசு தீவிரம் காட்டிவருவதாகவும் சென்னைச் செய்திகள் தெரிவித்துள்ளன. (க-8)

### பாட்டாளி மக்கள் கட்சியை

# தேசிய ஐ.முன்னணியில் சேர்த்தால் கூட்டணிக்குள் பிளவு ஏற்படும்

## செயலர் கரும் எச்சரிக்கை

பாட்டாளி மக்கள் கட்சியை தேசிய ஐக்கிய முன்னணியில் சேர்த்துக் கொண்டால் கூட்டணிக்குள் பிளவுகள் ஏற்படுமென்று பாரதிய ஜனதாக் கட்சியின் மாநில செயலர் இல. கணேஷன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; திராவிட முன்னேற்றக் கழக தமிழகக் கூட்டணியிலிருந்து பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் விலகும் போது மு.கருணாநிதி மீது கண்டபடி குற்றச்சாட்டுகளைச் சுமத்தி விட்டு விலகிச் சென்று அ.இ.அ.தி.மு.கவில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டார்.

இப்பொழுது முதல்வர் ஜெயலலிதா தனக்கு மாநிலங்கள் அவையில் இடம் ஒதுக்கவில்லையென்றும் தன்னை மரியாதைக் குறைவாக ஜெயலலிதா நடத்திவிட்டதாகவும் கூறித்திரிகிறார்.

டாக்டர் இராமதாஸின் பாட்டாளிகள் மக்கள் கட்சியை மீண்டும் சேர்ப்பதென்றால் யோசிக்கவேண்டிய விடயம் என்று இல.கணேஷன் தெரிவித்தார். (து)

# காஷ்மீர்பிரச்சினையை முன்வைத்து பேச்சு நடத்துவது தவறானது

(லண்டன்)

தான் உட்பட பாகிஸ்தான் தலைவர்கள் அத்தனை பேரும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு காஷ்மீர் பிரச்சினையை முன்வைப்பது தவறு என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோ தெரிவித்தார்.

பிரித்தானிய தொலைக்காட்சி ஒன்றிற்கு கொடுத்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## உலக தரிசனம்

அத்தொலைக்காட்சியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; இது ஒரு தவறான போக்கு என்றும் இதனால் பாகிஸ்தானின் பொருளாதாரம் பின்னடைவையே காண்கிறது என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; இருநாடுகளும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமாயின் பாதுகாப்பான எல்லைப் பாதுகாப்புடன் இருநாடுகளும் இருக்க வேண்டும். மற்றைய உறவுப் பிரச்சினைகள் பற்றியும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் பெனாஸீர் பூட்டோ தெரிவித்தார். (து)

# சிறந்த நாடு நோர்வே

(ஒஸ்லோ)

உலகில் மனிதன் வாழ்வதற்கு சிறந்த நாடாக நோர்வே தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ் வரிசைப்படுத்தலில் அடுத்தபடியாக கனடா, அவுஸ்திரேலியா, சுவீடன் ஆகிய நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (க-3)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### நீரிழிவு நோயே நீங்கி விடு - - - -

நீரிழிவு நோயாளர்களை களிப்படையும் சேதி ஒன்றை ஆய்வாளர்கள் அறிவித்துள்ளார்கள். சேதி என்னவென்றறிய அவசரப்படுகிறீர்களா? சரி விடயத்துக்கு வாருங்கள்.

சதைய் என்ற அக அங்கத்திலுள்ள இலங்ககாண் சிறுதீவு என்ற சுரப்பிகள் இன்சுலின் ஓமோனை மிகவும் குறைந்தளவில் சுரப்பதையே நாம் நீரிழிவு நோய் என்கிறோம். இவ் இன்சுலின் குறைந்தளவில் சுரக்கப்படுவதால் தான் நாம் உண்ணும் உணவிலுள்ள குளுக்கோசு கிளைக்கோஜனாக மாற்றப்படாமல் குருதியில் தங்கி சிறுநீருடன் வெளிவந்து விடுகிறது. இதனைத் தடுப்பதற்குத் தான் நீரிழிவு நோயாளர்களுக்கு ஊசி மூலம் இன்சுலின் ஏற்றப்படுகிறது. இது வழமையான சிகிச்சை.

இப்போது இந்நீரிழிவு நோயாளர்களுக்கு இதில் இருந்து நிரந்தர விடுதலை அளிக்க பிறப்புரிமையியல் சிகிச்சை முறையொன்றை ஆய்வாளர்கள் அணுகிக்கொண்டிருக்கிறார்கள் அதாவது மனிதனில் செயற்படாமல்போன இன்சுலின் சுரக்கும் கலங்களை பன்றியின் சதயக் கலங்களில் இருந்து பிரித்தெடுத்து அதனை நீரிழிவு நோயாளர்களுக்கு அதி நவீன சத்திரசிகிச்சை மூலம் பொருத்தி அதன்மூலம் குருதியில் போதியளவு இன்சுலினை விடுவிக்கப் பண்ணி இந்நீரிழிவு நோய்க்கு நிரந்தர வேட்டு வைப்பதே அவர்களின் குறிக்கோளாகும்

இம்முயற்சி தற்போது பபுன் என்ற குரங்கில் மேற்கொள்ளப்பட்டு வெற்றி அளித்துள்ளதாம். இதனை இனி மனிதனில் பரீட்சித்துப் பார்த்து வைத்திய நிபுணர்கள் ஓக்கே சொன்னால் பிறகென்ன நீரிழிவு நோயாளர்கள் குறிஞ்சா இலையை நாடத் தேவை ஏற்படாது.

### "பிலம்- ஷோவை" புகுத்திய பிரான்ஸ் நாடு

இன்று உலகின் மூலை முடுக்கெல்லாம் திரைப்படம் எடுத்து புற்றீசல்போல அன்றாடம் வெளிவந்துகொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இத்திரைப்படங்கள் உதயமானது பிரான்ஸ் நாட்டில் தான் என்றால் நம்புவீர்களா? கவித்துவம் மிக்க பிரெஞ் மொழியிலான இத்திரைப்படங்கள் கலை காதல் மற்றும் உறவுகளை சிறப்பாக வெளிக்கொணரும் ஆற்றல் உடையது என்பதை எவரும் மறுக்கார்.

அவதானி

# பேருந்து நீரில் மூழ்கியதில் பத்துப் பேர் பலி

## பீஹாரில் சம்பவம்

(புதுடில்லி)

இந்தியாவின் கிழக்குமாநிலமான பீஹாரில் பேருந்து ஒன்று நீரில் மூழ்கியதில், பத்துப் பேர்பலியாகியதுடன், முப்பத்திநான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மேற்படி பேருந்து கட்டுப்பாட்டை இழந்ததனாலேயே நீரில் மூழ்கியதாகவும், இப் பேருந்தில் அதிகளவு பயணிகள் பயணம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

### விம்பிள்ரன்

# அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீரர் தோல்வி

[லண்டன்]

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்ரன் ரெனிஸ் போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்தர வீரர்களில் ஒருவரான அமெரிக்காவின் ஆன்ரே அகாஸி தோல்வியைத் தழுவினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் பாக்கிராவ்ரரிடம் இவர் தோல்வி கண்டார்.

இதேவேளை, இன்னுமொரு முதல்தர வீரரும் விம்பிள்ரன்போட்டிகளில் கடந்த 7 வருடங்களாக சம்பியன் பட்டம் வென்றுவந்தவருமாகிய பீட்சாம்ராவும் முன்னதாகவே தோல்வியடைந்து போட்டிகளில் இருந்து வெளியேறினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# அடுத்த ஒலிம்பிக் சீனாவில் இடம் பெறும்?

(புதுடில்லி)

2008 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான சந்தர்ப்பம் சீனாவிற்கு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிக மோசமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் சீனா ஈடுபட்டு வருவதனால் இச் சந்தர்ப்பத்தை சீனாவிற்கு வழங்கக்கூடாது என கண்டித்து அண்மையில் பல நூற்றுக் கணக்கான திபெத்தியர்கள் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் இந்திய அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திபெத்திய இளைஞர் காங்கிரஸ் தொண்டர்களும் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

# அனைத்துக்கட்சிக்கூட்டம் விரைவில் புதுடில்லியில்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை புதுடில்லியில் கூட்டவுள்ளார்.

அடுத்த வாரம் இந்தியா வரவிருக்கும் பாகிஸ்தான் அதிபருடன் அர்த்த புஷ்டியான பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக இந்த சர்வ கட்சி ஆலோசனைக் கூட்டம் நடைபெற இருக்கிறது.

இந்தியாவிலுள்ள முப்பத்தைந்து கட்சிகளுக்குப் பிரதமர் அழைப்பு விடுத்திருப்பதாக பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் அதிபரின் வரவும் அவருடன் பேச்சுக்கள் தொடர்வது குறித்தும் ஏற்கனவே முன்னாள் பிரதமர்களான நரசிம்மராவ், வி.பி.சிங், சந்திரசேகர் ஆகியோருடன் வாஜ்பாய் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். (து)

# பொலிஸார் மீது அதிரடி 30 பேர் வரையில்பலி

## நேபாளத்தில் சம்பவம்

(காட்மண்டு)

நேபாளத்தில்மாவோதீவிரவாதிகள்நடத்திய இருவேறு அதிரடித்தாக்குதலில முப்பதொருபொலிஸார்கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர்.

நேபாளத் தலைநகரிலிருந்து நூற்றியிருபது கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சோதனைச் சாவடியை மாவோ தீவிரவாதிகள் திடீரெனத் தாக்கியதில் இருபத்திரண்டு பொலிஸார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலருக்கு படுகாயமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தலைநகரிலிருந்து தொண்ணூறு கிலோமீற்றர் தொலைவிலுள்ள காவல் நிலையம் ஒன்றையும் தாக்கியுள்ளார்கள். இதில் ஒன்பது பொலிஸார் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

நேபாளத்தில் மக்கள் குடியரசை உருவாக்கவே இக்கொலைகள் நடைபெறுவதாகத் தெரியவருகிறது (து)

# தமிழக பொலிஸார் மீது விரைவில் வழக்கு தாக்கல்

### சென்னை நகர மேயர் தெரிவிப்பு

(சென்னை)

தமிழக காவல்துறையினர் மீது சென்னை நகர் மேயர் மு. க. ஸ்ராலின் வழக்குத் தொடரவுள்ளார்.

தானில்லாதவேளை காவல் துறையினர் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த பெண்கள் மீது எல்லை மீறி நடந்ததாக குற்றம் சாட்டி வழக்குத் தொடர இருப்பதாக நேற்று முன்தினம் சிறையிலிருந்து பிணையில் விடுதலையான மு. க. ஸ்ராலின் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (து)

முதல் இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க்கு இல்லைநிலை: குறள்

# வலம்புரி

## கொழும்பில் சுற்றிவளைப்பு

கொழும்பு மாநகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும், சுற்றிவளைப்பும், தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்படுவதும் சர்வசாதாரணமாகி விட்டது.

பொலிஸாருக்கு சம்பளத்திற்கு மேலாக வருமானம் தேவையெனில உடனடியாக அவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை சுற்றிவளைப்பாகும்.

குறிப்பிட்ட பிரதேசத்தைச் சுற்றிவளைத்து தமிழ் வர்த்தகர்களை ஒரு வெருட்டு வெருட்டிவிட தேவையான பணம் பொலிஸாருக்குக் கிடைத்துவிடும்.

இதைவிட தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைது செய்தால் அதிலும் தலைக்கு பத்துப் பதினைந்து மயில்கள் தேறும் இப்போதெல்லாம் பொலிஸாரின் கடமை சுற்றிவளைப்பதும் தேடுதல் நடத்துவதும் நாலும் பணம் உழைப்பது மென்றாகி விட்டது.

இதனால் கொழும்பில் கொள்ளைக் கோஷ்டிகள் பல்கிப் பெருகிவிட்டன. அதிலும் கொழும்பில் தற்காலிகமாக வசிக்கும் தமிழர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து அவர்களின் சொத்துக்களை கொள்ளையடிப்பதற்கென்றே ஆயுதம் தரித்த கொள்ளைக் கோஷ்டிகள் உருவாகியுள்ளன. இக கோஷ்டிகள் கொள்ளையடிப்பதுடன் நின்றுவிடுவதில்லை, கூலிக்குக் கொலை, ஆட்கடத்தல் கற்பழிப்பு என்ற பயங்கர நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் தெஹிவளையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவரின் வீட்டில் கொள்ளையடிக்கச் சென்ற சிங்களக் காடையர் கோஷ்டி மருத்துவபீட இறுதியாண்டு மாணவனான டாக்டரின் மகனைக் குத்திக்கொலை செய்துள்ளது.

இத்தகைய கொலைகளையும், கொள்ளைகளையும் பொலிஸார் தடுப்பதாக இல்லை. கொலைக்கும், கொள்ளைக்கும் தமக்குத் தொடர்பில்லாதவர்கள் போல் பொலிஸார் நடந்து கொள்வது தமிழ் மக்களின் விடயத்தில மட்டுமே.

இந்நிலையில் நமக்கென ஓர் நாடு, நமக்கென ஓர் காவற்படை இருந்தால் ஏன் இந்தக்கதி எனத்தமிழ்மக்கள்சிந்திப்பதில் என்ன தவறுண்டு என்பதை உரியவர்கள் ஒருகணம் சிந்திக்கவேண்டும்

# சைவ சமயத்திற்கு மீண்டுமோர் பேராபத்து

# இனயுத்தத்தைப் பயன்படுத்தி மதம் மாற்றுவதில் சில கிறிஸ்தவ அமைப்புகள் களத்தில் குதிப்பு

## ஆங்கிலேயர் தந்த வேதனையில் மீண்டும் சைவ மக்கள்

கடந்த 25 06-2001இல் எழுதிய கட்டுரையின் 2 ஆம் தொடர்ச்சி இன்று வெளிவருகிறது.

இக்கட்டுரை தொடர்பாக பலத்த வாதப் பிரதி வாதங்களும் கடிதங்களும் வந்த வண்ணமுள்ளன.

இவையெல்லாம் ஆராயப்பட்டு பொருத்தமானவை இப்பகுதியில் பிரசுரிக்கப்படுமென்பதை தெரியப்படுத்துகின்றோம். (ஆர்)

(2)

(25-6-2001 இன்தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்து நிலைமைகளை நேரில் அவதானிக்க வரும் பொது அமைப்புகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், கிறிஸ்தவ மதகுருமாரையே முதலில் சந்திக்கச் செல்கின்றனர் ஏனெனில் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மதமே முதன்மை பெற்று விளங்குவதாகவும். தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் கிறிஸ்த மதகுருமாரே குரல் கொடுப்பதாகவும் ஒரு மாயையை திட்டமிட்டு சில கிறிஸ்த அமைப்புகள் ஏற்படுத்தியுள்ளன

இதன் உண்மையான நோக்கம் தமிழ் மக்களின் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதல்ல மாறாக யாழ்ப்பாணத்தில் சைவ சமயத்தை, அச்சமயம் சார்ந்தவர்களை இரண்டாந்தரமாக்குவதே இலக்காகும். இவ்விலக்கை அடைவதற்காக அரச சார்பற்ற இணையங்களின் ஒன்றியத்தை சில கிறிஸ்தவ மதகுருமார் ஆக்கிரமித்துள்ளனர் அசனூடாக சைவ மதகுருமாரை அவர்கள் புறந்தள்ளி விட்டனர்.

### பத்திரிகையாளர் கைது நல்லதோர் உதாரணம்

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் வைத்து பத்திரிகையாளர் திருச்செல்வம் கைது செய்யப்பட்டார் இவரது விடுதலை தொடர்பாகக் குரல் கொடுக்குமாறு அரசசார்பற்ற அமைப்புகளின் ஒன்றியத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது எனினும் அவ்வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. அதனை நிராகரித்தவர் அவ்வமைப்பிலுள்ள கிறிஸ்தவமத குரு ஒருவரே அதற்குக் காரணம பத்திரிகையாளர் திருச்செல்வம் கிறிஸ்தவமதத்தைச் சாராதவர், சைவசமயத்தவர் அதனால் அவரின் விடுதலையில் அக்கறை காட்ட குறித்த கிறிஸ்தவமதகுரு விரும்பவில்லை.

அப்படியானால் இப்போது கிறிஸ்தவ அமைப்புகள எந்த நோக்கத்தோடு தமது பணியை முன்னெடுக்கின்றன என்பது இங்கு நோக்குதற்குரியதாகும்.

### கிறிஸ்தவ அமைப்புகள் எல்லாம் அப்படியல்ல

யாழ்ப்பாணத்தில் பல கிறிஸ்தவ அமைப்புகள் இப்போது மூலைக்கு மூலை தோற்றமெடுக்கின்றன. உலக அழிவு காலத்தில் இத்தகைய அமைப்புகள தோற்றம்பெறுமென்பாத புனிதவிவிலிய பத்திரிகையாளர்மும் ஓர் இடத்தில்சுட்டிக்காட்டுவதாக ஞாபகம்.

எதுவாயினும் அழிவுகாலத்தில் இப்புதிய அமைப்புகள் தோன்றுகின்றன என்பதைவிட இவ்வமைப்புகளின் தோற்றத்தால் உலகம் அழியும் என்பதே உண்மை: இதனால் தான் சேக்கிழார் முன்கூட்டியே ,

மறு சமயங்கள் மாள
வேதகம் செய்வாய்
பிஞ்ஞகா போற்றி

என்று பாடியுள்ளார். மறு சமயங்கள் எனச் சேக்கிழார் விழித்துப்பாடியது இப்போது மதம் பரப்ப சைவ சமயத்தவர்களின் வீட்டுப் படலையைத் தட்டும் சமயங்களையேயாம். இங்கு

மறு என்பது குற்றம் எனப்

## மதம் மாற்றும் அமைப்புக்களே உலக அழிவுக்கு அறிகுறியாகும்

பொருள் படும், குற்றமுள்ள சமயங்கள் வீட்டு வாசல்படியேறினால் அது அழிவுதானே அதனால் தான் பரம்பொருளை நோக்கி இறைவா குற்றமுள்ள சமயங்களை அழித்து மக்களைக் காப்பாற்று எனச் சேக்கிழார் தொழுது நின்றார்:

இதனை ஒருகணம் சைவ சமயத்தவர்கள் உணரவேண்டும். அதேவேளை இங்கு குறிப்பிடப்படும் கிறிஸ்தவ அமைப்புகள் எல்லாம் மதப்பரப்புபவையல்ல கத்தோலிக்கசமயம், தென்னிந்திய திருச்சபை சார்ந்த மக்கள் பிற சமயங்களையும் மதிப்பவர்கள சைவத் தெய்வங்களுக்கு வணக்கம் செலுத்துபவர்கள்.

அவரவர் தத்தம் சமயங்களில் இருந்து தம்மை நெறிப்படுத்தினால் போது மென்ற பரந்த உணர்வு கொண்டவர்கள். இவர்களுக்கும் மதம் பரப்பும் அமைப்புகள தொல்லை கொடுக்கவே செய்கின்றன.

விதுரன்

### சைவத்தின் சரிவுக்கு அதன் அமைப்பே காரணம்

உலகிலுள்ள எந்த மதங்களை எடுத்து நோக்கினாலும் அந்த மதங்களுக்குரிய மதகுருமார் அந்தந்தச் சமூகத்திலிருந்து தெரிவாகின்றனர். அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கென தனியான கல்வி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது சமயத்தின் பால் ஈடுபாடு கொண்ட பொருத்துடையவர்களே மதகுருவாகத் தெரிவு செய்யப்படுவர். இதனால் அச்சமயங்களுக்குள் நிறுவன மயப்படுத்தப்பட்ட ஓர் ஒழுங்கு முறை பேணப்படுகிறது

ஆனால் சைவ சமயத்தின் மதகுருமார் அங்கீகரிக்கப்பட்ட ஓர் சமூகத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றனர். இதனாலேயே சைவத்தின் வளர்ச்சிபெரும்பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

(அடுத்த திங்கள் தொடரும்)

## குருஷேத்திரம்

# பலதுறைகளிலும் முன்னேறியுள்ள பெண்கள்

# பத்திரிகைத் துறையில் பங்களிப்பது குறைவு

யாழ். கூட்டுறவுச் சபை நடத்திய பெண்களுக்கான பத்திரிகை இயல் கருத்தரங்குத் தொடரில் முதலாம் நாள் தொடக்கவுரை நிகழ்த்திய கலாநிதி சபா. ஜெயராசாவின் உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது. (ஆ-ர்)

யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கான நவீன கல்வித் தளங்களின குறியீடுகளாக பெண்கள் கல்லூரிகளின தோற்றமும் தொடக்கமும் அமைந்தன ஒருபுறம் உடுவில் மகளிர் கல்லூரியும், மறுபுறம் இராமநாதன் கல்லூரியும் ஆற்றிய பணிகள் பெண்களும் அபிவிருத்தியும், பெண்களும் தொடர்பாடலும், பெண்களும் பாரம்பரியங்களிலிருந்து வேறுபட்ட தொழில்களைப பெறுதலும் என்ற வளர்ச்சிகளுக்குத் தூண்டுதலளித்தன. பெண்கள் மாதவேதனம் பெறும் ஆசிரியத் தொழிலில் முதலில் ஈடுபடலாயினர்:

பெண்களின் ஆசிரியப்பணிகளின்வாயிலாக புதியதோர் பண்பாட்டுவளர்ச்சியைக் கட்டியெழுப்ப முயன்ற அமரர் சேர். பொன். இராமநாதன் அவர்கள் தான் பெண்களுக்காக அமைத்த இராமநாதன் கல்லூரியில் வளமானதும் ஒன்றிணைந்ததுமான ஒரு கலைத்திட்டத்தினை வடிவமைத்தார்.

### கலைத் திட்டம்

ஆழ்ந்த தமிழ் இலக்கண அறிவு, இலக்கிய அறிவு, ஆங்கில அறிவு, சமய அறிவு, கோலமிடல், சமையற்கலை மற்றும் தையற்கலை அறிவு, வரலாற்று அறிவு, விஞ்ஞான அறிவு, நிறைந்த வாசிப்பு அறிவு முதலாம் வளமான அனுபவங்களை உள்ளடக்கிய செழுமையான கலைத்திட்டத்தை அவர் இராமநாதன் கல்லூரியில் வடிவமைத்துக் கொடுத்தார்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளைச் செப்பமாகக் கற்பித்துக் கொடுத்தமை பெண்களின் தொடர்பாடல் திறன்களை வளர்ப்பதற்கும் துணைநின்றது; பெண்கள் கல்வியின் வளர்ச்சியானது யாழ்ப்பாணத்துப் பெண்களின் வாசிப்பு அறிவைத் தூண்டுவதற்கும் வழிவகுத்தது டாக்டர் திரிபுரசுந்தரியாகிய லக்ஷிமியின் நாவல்கள் அக்காலத்தில் யாழ்ப்பாணத்துப் பெண்களால் விரும்பி வாசிக்கப்படலாயின.

### பெண் கல்வி வளர்ச்சி

பெண் கல்வியின வளர்ச்சியானது யாழ்ப்பாணத்தில் பெண் எழுத்தாளர்களின் தோற்றத்தையும் வளம்படுத்தியது. மங்களநாயகம் தம்பையா, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம், திருமதி கணேசலிங்கம், திருமதி வேதவல்லி கந்தையா முதலிய முன்னோடிப் பெண் எழுத்தாளர்களின் தோற்றம் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பெண் கல்வி வளர்ச்சியின் குறியீடுகளாயின.

'பெண்கள் கல்வியும் தொழில் விரிவாக்கமும்' என்ற செயற்பாட்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கல்விப் பணிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இந்து போர்ட் என்று அழைக்கப்பட்ட சைவவித்தியா விருத்திச் சங்கம் தாம் கிராமம் தோறும் அமைத்த பள்ளிக்கூடங்களில் 'நெசவு' என்ற பாடத்தை தொழில் முறை அனுபவங்களுடன் அறிமுகம் செய்தனர்.

### கூட்டுறவு இயக்கம்

யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியுற்ற கூட்டுறவு இயக்கம் கிராமங்களில் கூட்டுறவு நெசவு ஆலைகளைத்திறந்து பெண்களுக்குரிய மாற்று வகையான தொழில் வாய்ப்புக்களை விரிவாக்கியது.

தையல், நெசவு முதலிய மாற்று வகைத் தொழில்களில பெண்கள் ஈடுபடத் தொடங்

[2 ஆம் பக்கம் பார்க்க]

# பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்தால்

# ஜனாதிபதிக்கு எதிராககுற்றப் பிரேரணை

## எதிர்கட்சிகள் கூட்டாக முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க யூலை மாதத்தில் பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைக்க முனைந்தால் அவருக்கெதிராக அரசியற் குற்றச்சாட்டுப்பிரேரணையை கொண்டு வருவதென்று, எதிர் கட்சிகள் மற்றும் அரசாங்கத்தினுள் செயற்படும் சக்தி வாய்ந்த குழுக்கள் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டாக தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை யூலை மாதத்தில் விவாதித்து வாக்கெடுப்புக்கு விடவேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கப் போதிய வலு இல்லாத நிலையில் விவாதத்தை ஒகஸ்ட் வரை தள்ளி வைத்துவிட்டு விவாதம் பாராளுமன்றில் எடுக்கப்படும் முன்னரே அதனைஇரண்டு மாதம் ஒத்திவைத்து விட்டு ஒக்ரோபரில் தேர்தல் பிரகடனத்தை வெளியிட தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

ரணில்

நம்பிக்கையில்லாத்தீர்மானம் தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது;

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர்களுடன் பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தியபின் ரணில்விக்கிரமசிங்காவுடன் ரவூப்ஹக்கீம் பேசியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இப் பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் எதுவும் வெளியிடப்படவில்லை; (வ)

## படுகாயமடைந்த தாமரைக்கனிக்கு சிகிச்சை

(சென்னை)

கைகால் எலும்புகள் முறிந்த நிலையில் மதுரையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் தாமரைக் கனிக்கு நேற்று தனியார் மருத்துவமனை ஒன்றில் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டது.

தி.மு.க.தலைவர் கருணாநிதியை கைதுசெய்தபோது மாநிலம் முழுவதும் பெருமளவில் தி.மு.கவினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைதுசெய்யப்பட்டனர்.

'அம்மாவின் தயவில் பிழைத்த நீ இப்ப கருணாநிதியோட சேந்துட்டியா?' என்று சொல்லிச் சொல்லி பொலிஸார் தன்னை மிருகத்தனமாக அடித்ததாகவும் அ.தி.மு.கவி லிருக்கும் தனது மகன்தான் இத்தனைக்கும் காரணம் என்றும் தாமரைக்கனி கூறியுள்ளார்.

இதேவேளை முன்னர் அ.தி.மு.கவின் தீவிர உறுப்பினராகவும் ஜெயலலிதாவின் விசுவாசியாகவும் இருந்த தாமரைக்கனி சட்டப்பேரவையில் வைத்து தி.மு.க உறுப்பினர் ஒருவரின் மூக்கை அடித்து உடைத்து பரபரப்பை ஏற்படுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந.8)

### தாயுடன்...

படுவாளார். இவருடன் சீருடையினரால் தாக்கப்பட்ட இவரின் தாயாரான தயபிடபிள்ளை பொன்னம்மா (வயது 82) என்பவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சிப்பகுதியில்மக்கள் மீளக்குடியேறப்பட்டபின் இடம்பெற்ற முதலாவது பாலியல் வன்முறைச்சம்பவம் இதுவாகும்.

82வயதான தாயாருடன் வீட்டில் தனிமையில் இருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த சீருடைஅணிந்தவர்கள் தாயாரைத்தாக்கிவிட்டு சம்பந்தபட்டவரைபாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர். பிரஸ்தாப பெண் கூக்குரலிட்டபோதும் அயலவர்கள் எவரும் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு செல்லவில்லை

இதனை அடுத்துநேற்றுக் காலை அயலவர்கள் அருகில் உள்ள இராணுவமுகாமில் சம்பவம் தொடர்பாக முறைப்பாடுசெய்தனர்.

சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் கொடிகாமம் பொலிசாருக்குத்தகவல் தெரிவித்து அவர்கள் மூலம் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் மகளையும் தாயையும் சேர்ப்பித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவருமகைது செய்யபபடாதபோதும் இது தொடர்பாகப் பொலிசார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பிலும், வடக்கு கிழக்கிலும அரச படையினரால் தொடர்ச்சியாக இளம் தமிழ்ப்பெண்கள் மீது மேற்கொள்ளப்படுவரும் பாலியல் வல்லுறவுச்சம்பவங்களை கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு கிழக்கில பூரண ஹர்த்தாலும், மலையகத்தில பிரார்த்தனையும், கொழும்பில் ஆர்ப்பாட்டமும் செய்யப்பட்ட 48 மணித்தியாலயத்திற்குள் இச் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம்தென்மராட்சிப் பகுதியில் மீளக்குடியேறிய மக்களை அச்சத்திலும் பயப்பீதியிலும் ஆழ்த்தியுள்ளது. (வ)

## தேங்காய் வீழ்ந்து வீதியால் சென்றவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மரத்தில் தேங்காய் பிடுங்கிக் கொண்டிருக்கையில் தேங்காய் கைநழுவி விழுந்ததனால். வீதியில சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஆனைக்கோட்டைப் பகுதியில நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில். வீதியால் சென்று கொண்டிருந்த வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சோமசுந்தரம் விஜயகுமார் (வயது-22) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார் (இ-10)

### பிரச்சினையை

மன்ற உறுப்பினர் யு எல்.எம் ஹனீபா தெரிவித்துள்ளார்.

தமிழ் முஸ்லிம மக்களின் பிரச்சினைகளை தூரநோக்குடன் அணுகுவதாலேயே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில அதிகளவில் சிறுபான்மைக்கட்சிகள அங்கம் வகிக்கின்றன.

ஜனாதிபதியினால் தீர்வுகாண முடியாத எந்தவொரு பிரச்சினையையும் ஏனைய தலைவர்களால் தீர்வுகாண முடியாது. இதனாலேயே பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எமது ஆதரவை வழங்கி வருகிறோம் (ந-5)

### பிரிட்டனிலும்...

பொங்கு தமிழ் எழுச்சிநிகழ்வு ஐரோப்பிய நாடுகளிலஎழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

பிரிட்டன் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ''திசை எங்கும இசை வெள்ளம'' எனும ஒலி நாடாவும் வெளியிடுவைக்கப்பட்டது. (இ)

# வசந்தராஜா மூலம் புலிகளுடன் அரசு இரகசியஉறவுவைத்திருந்தது

## ஐ தே கட்சி பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி எதிரணியில் இருக்கும் எந்தக் காலகட்டத்திலும் விடுதலைப்புலிகளுடன், இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ பேசியதுகிடையாது ஆனால் தற்போதைய அரசு தான் எதிரணி வரிசையில் இருக்கும்போது விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் கருணசேனா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்!

அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது. எம். வசந்தராசாவை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனதலைவராக நியமித்து விடுதலைப்புலிகளுடன் அவர் மூலமாக இந்த அரசு பேசியது. உண்மை இவ்வாறு இருக்க யானையும். புலியும் ஒட்டி உறவாடிவருகிறது என்று அரச தரப்பினர் கூறுவதைக் கேட்டு எமக்குப் புளித்துப்போய்விட்டது.

தற்போது அரசுமீது மக்கள் உண்மையாகவே நம்பிக்கையை இழந்துவிட்டனர். நம்பிக்கைஇல்லாத்தீர்மானத்திற்கு அரசு முகம்கொடுக்கத் தயங்குமானால் மக்களை ஒன்று திரட்டி வீதிகளில் இறங்கிப்போராட்டம் நடத்தவும் சட்டநடவடிக்கை எடுக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி தயங்கமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார், (வ

## விம்பிள்ரன்போட்டி அமெரிக்க வீராங்கனைவெற்றி

(லண்டன்)

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்ரன் ரெனிஸ் போட்டிகளில் மகளிர்ஒற்றையர் பட்டத்தை அமெரிக்காவின் வீனஸ்வில்லியம்ஸ் வென்றுள்ளார்.

நேற்றுஇடம்பெற்ற இறுதியாட்டத்தில்அவர் பெல்யடத்தின் ஜஸ்டின் ஹெனினை தோற்கடித்து கடந்தமுறை தான்பெற்றிருந்தபட்டத்தை இம்முறையும் தக்கவைத்துக் கொண்டார்.

இதேவேளை ஆண்கள் ஒற்றையர் இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியாவின் பாற்றிக் இராவ்ரரும் குரோஷியாவின் இவானோசேவிக்கும் மோதவுள்ளனர். (ந.8)

### கிளைமோர்..

மேற் கொண்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகள இப் பகுதியில் மேற்கொண்ட தேடுதலின் போது மரத்தில் பொருத்தியிருந்த கிளைமோரொன்றை மீட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்படையினரின் ஊடுருவல் அண்மைக் காலத்தில் அதிகரித்துவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது இதேவேளை மேற்படி சமபவத்தில் காயமடைந்தவரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன; (இ)

# அடுத்த மூன்று மாதத்துள் பாகிஸ்தானில் தேர்தல்

## பதின்நான்கு கட்சிகள் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

அடுத்து மூன்று மாதத்துக்குள் பாகிஸ்தானில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நவாஸ்ஷெரிப்பின் முஸ்லிம் லீக் முன்னாள் பிரதமர்பெனாஸீர் பூட்டோவின் பாகிஸ்தான் மீட்புக் கூட்டணி உட்பட பதின்நான்கு கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதிபர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்பின்கொள்கைகளையும் அவரால் அண்மையில் உருவாக்கப்பட்டதேசிய பாதுகாப்பு மன்றத்தையும் நிராகரித்த இந்த கட்சிகள் தேர்தலை நடத்தி விரைவில் ஜனநாயக வழிக்கு பாகிஸ்தானைக் கொண்டுவரவேண்டும் என்று தெரிவித்துள்ளன. [ந]

## இஸ்ரேல் தூதுவர் பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இஸ்ரேலியத்தூதுவர் டேவிற்நர்சைட்' கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவிடம்தனது நியமனக் கடிதத்தை சமர்ப்பித்து கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்தவருடம் மேமாதம்விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்குமிடையே யாழ் குடாநாட்டில் யுத்தம் நடைபெற்றபோது இலங்கை அரசு இந்தியாவிடம உதவி கோரியது. இந்திய அரசு மனிதாபிமான உதவிகளைமாத்திரமேவழங்க முடியுமென அப்போது தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இஸ்ரேலுடன் உறவைத் துண்டித்திருந்த இலங்கை அரசு. அந்நாட்டுடன் மீண்டும் உறவைப்புதுப்பித்து, இராணுவ ரீதியான உதவிகளைப் பெற்று வருகின்றமை இங்குகுறிப்பிடத்தக்கது. (இ)

## ஜே. வி. பி காரியாலயம்மீது தாக்குதல்

(சிலாபம்)

சிலாபத்திலுள்ள மக்கள் விடுதலை முன்னணிக் காரியாலயத்தின் மீது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது;

இத்தாக்குதலின் போது மக்கள் விடுதலை முன்னணிக் காரியாலயம் அடித்து நொருக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ)

### நுழை.

ளன.

இதேவேளை மாணவர் ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (வ)


**ராஜா**
யாழ்ப்பாணம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)



**பரந்தாமன் றேடேர்ஸ்**

எமது சேவைகளாக கட்டிடப் பொருட்கள், மரத்தளபாடங்கள், கொங்கிறீற் கற்கள், மரப்பலகை தீராந்தி வகைகள் விற்பனை செய்தலும், தொலைத் தொடர்பு சேவை, போக்குவரத்து சேவை என்பனவும் நடைபெறுகின்றன. அனைத்து தேவைகளையும் எந்நேரமும் பெற்று நிறைவு செய்யலாம்.

பரந்தாமன் றேடேர்ஸ்
2ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
தொலைபேசி இலக்கம்: 070-212907
[2187]


இப் பத்திரிகை ''வலம்புரி'' அலகோ பிரசுரத்தாரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலை மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.